# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **242/ந/2018**
நாள் : **26/12/2018**

**திரு S. புருஷோத்தமன்,**
**சென்னை – 600 073.** – **முறையீட்டு மனுதாரர்**

**ஆணையாளர்,**
**பல்லவபுரம் நகராட்சி,**
**பல்லவபுரம்.** – **எதிர் மனுதாரர்**

காஞ்சிபுரம் மாவட்டம், சேலையூர், ஸ்ரீராம்நகர், முதல் தெரு, கதவு எண்.9 என்ற முகவரியில் வசிக்கும் திரு S. புருஷோத்தமன் அவர்களின் 24.12.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 242/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

காஞ்சிபுரம் மாவட்டம், சேலையூர், ஸ்ரீராம்நகர், முதல் தெரு, கதவு எண்.9 என்ற முகவரியில் வசிக்கும் திரு S. புருஷோத்தமன் என்பவர், பல்லவபுரம் நகராட்சியில் சுகாதார அலுவலராகப் பணியாற்றி 31.10.2008 அன்று ஓய்வு பெற்றதாகவும், தான் பணியாற்றிய காலத்தில் தனக்கு வழங்கப்படவேண்டிய 5–வது ஊதியக்குழு நிலுவைத் தொகை மற்றும் அத்தொகைக்கான வட்டியினை வழங்கக் கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர் தனது 29.02.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.9019/எல்3/2008 மற்றும் 10.04.2008 நாளிட்ட சுற்றறிக்கை எண்.16729/எல்3/2008–இல், ஓய்வு பெற்ற நகராட்சிப் பணியாளர்களுக்கு, பணியின் போது பிடித்தம் செய்யப்பட்ட சேமநல நிதிக்கான வட்டித் தொகையினை வழங்குவது குறித்து மேற்கொள்ளப் படவேண்டிய நடவடிக்கைக் குறித்த வழிகாட்டுதல்களை அறிவிக்கை செய்துள்ளார். எனவே, மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, சேமநல நிதியில் சேர்க்கப்பட்ட 5–வது ஊதியக்குழுவின் நிலுவைத் தொகை மற்றும் அதற்கான வட்டித் தொகையினை வழங்கக்கோரும் மனுவினை உரிய ஆவணங்கள் மற்றும் தேவையான விவரங்களுடன் பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு மனுச் செய்யுமாறு முறையீட்டு மனுதாரருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

3. முறையீட்டு மனுதாரரிடமிருந்து பெறப்படும் மனுவினை உரிய ஆவணங்களின் அடிப்படையில் பரிசீலனை செய்து, உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநரின் ஒப்புதலைப் பெற்று 5–வது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையினை வட்டியுடன் வழங்குவதற்கான நடவடிக்கையினை விரைந்து மேற்கொள்ளும்படி பல்லவபுரம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தியும் இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

**2018–** ஆம் ஆண்டு, **டிசம்பர்** திங்கள், **26–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு S. புருஷோத்தமன்,
9, ஸ்ரீராம் நகர் முதல் தெரு,
சேலையூர்,
சென்னை – 600 073.

2. நகராட்சி ஆணையாளர்,
பல்லவபுரம் நகராட்சி,
பல்லவபுரம்.

3. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரகம்,
தாம்பரம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி